

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (29.07.2025) சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, திருமதி சி. ஹரிப்ரியா. பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலை குழுத் தலைவர் என். சிற்றரசு, ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.வி.எம். வேல்முருகன், இணை ஆணையர்கள் இரா. வான்மதி, சி. குமரதுரை, துணை ஆணையர் ஆர்.ஜெயா, உதவி ஆணையர் ஆர் கார்த்திகேயன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் கஸ்தூரி, திருக்கோயில் செயல் அலுவலர். முத்துலட்சுமி, பள்ளி முதல்வர் ஜெயந்தி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க ஓரணியில்_தமிழ்நாடு முன்னெடுப்பு கீழ் திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகரம் 9வது வார்டில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கை முகாமை வீடு வீடாக சென்று, கழக ஆட்சியின் சிறப்பு திட்டங்களை எடுத்துக் கூறி கழகத்திற்கு உறுப்பினர்களை சேர்த்தார். உடன் நகர கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி பூவை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் வட்ட கழக செயலாளர் பரிசமுத்து நகர வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளம் ஆய்வு!

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஜூலை 30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.07.2025) சென்னை, கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் கலவல கண்ணன் செட்டி அறக்கட்டளையின் மூலம் நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் பள்ளி தொடர்ந்து நடத்த இயலாத சூழலில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அப்பள்ளியில் பயின்று வந்த 500க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்களின் எதிர்காலம் பாதிக்கப்பட கூடாது என்ற வகையில் துறையின் மூலம் நடத்திட உத்தரவிட்டு 2021 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியாக தொடங்கி வைத்தார்கள். இப்பள்ளிக்கு ரூ.1.78 கோடி செலவில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த ஜூன் மாதம் 27 அன்று இப்பள்ளிக்கு ரூ. 11.15 கோடி செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 32 வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கொண்ட கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து இப்பள்ளியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் 252 மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், 40 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளையும் வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் 123 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுக்கான செலவினத்தை இப்பகுதி திராவிட முன்னேற்ற கழகமே ஏற்றுக் கொண்டது.

இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22,249 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூ.138.13 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தாண்டு ரூ.14.44 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள 1,634 திருக்கோயில்களில் 2.372 திருக்குளங்கள் உள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பெறுப்பேற்றபின், ரூ. 4 கோடி செலவில் 3 புதிய திருக்குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, ரூ.147.94 கோடி மதிப்பீட்டில் 265 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளமானது 7.52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தில் தண்ணீர் வற்றியுள்ள நிலையில் இன்று காலை நானும், துறையின் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய மேலாண்மை இயக்குநர், நீர்வளத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோருடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தோம். இத்திருக்குளத்தில் தண்ணீர் நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் முழுமையாக ஆய்வு செய்து ஒரு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர். அதனை தொடர்ந்து, அந்த திருக்குளத்தில் எப்போதும் தண்ணீர் இருக்கிற வகையில் சிறப்பு ஏற்பாடு செய்ய திட்டமிட்டு இருக்கின்றோம்.

திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தங்கள் முதுகை திரும்பிப் பார்த்துக் கொள்வதில்லை. அவர்களின் தகப்பனார் போற்றுதலுக்குரிய குமரி அனந்தன் உடல்நலம் குன்றியிருந்தபோது எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வானகரத்தில் உள்ள அப்போலோ மருத்துவமனையிலும், பின்னர் சூர்யா மருத்துவமனையில் தான் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது உறவினரான வசந்தகுமார் உடல்நலம் பாதிக்கப்பட்ட போது, தனியார் மருத்துவமனையில் தானே சிகிச்சை பெற்றார். இதையெல்லாம் மறந்துவிட்டு பேசுகிறார். ஏன் அவருடைய கணவர் ராமச்சந்திரா மருத்துவமனையில் தான் பணியாற்றிக் கொண்டிருந்தார். பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு அரசியல் தலைவர்கள் இதுபோன்று தனியார் மருத்துவமனையை தான் நாடுகிறார்கள். அதில் பொதுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் சிரமங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகவும், பாதுகாப்பு கருதியும் இப்படி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே தமிழிசை போன்ற நாகரீக அரசியல்வாதிகள் என்று எங்களுடைய பட்டியலில் வைத்திருந்தவர்களை இது போன்ற கேள்விகளால் அந்த நாகரிகத்திற்கு அப்பாற்பட்டவர் என்ற பட்டியலில் திராவிட முன்னேற்ற கழகம் அவரை கருதும்.

ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் நிலைபாடு மாறி மாறி பேசுவது தான். பார்த்தாலே பெரிய பாக்கியம் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதியவர், பார்க்கவில்லை என்ற கோபத்திற்காக தற்போது தான் ஞானோதயம் பிறந்து ஒன்றிய அரசை எதிர்க்க துவக்கி இருக்கிறார். இந்த எதிர்ப்பு நியாயமான முறையில் இருந்தால் நாங்களும் அதை வரவேற்போம்.

எடப்பாடி பழனிசாமி பேசுவது எல்லாமே பொய் தான். அதற்காக தான் உருட்டலும் திரட்டலும் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்கு தகுந்த ஒரே தலைவர் தமிழக அரசியல் களத்தில் எடப்பாடி ஒருவர் தான். திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு நடைபெற்ற இடைத்தேர்தல்கள், நாடாளுமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல் என அனைத்திலும் வெற்றியை சந்தித்தது. இந்த வெற்றிகள் அனைத்துமே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி, திறம்பட செயல் தன்மை உள்ள ஒரு ஆட்சி என்பதற்கு மக்கள் அளித்த சான்றாகவே நாங்கள் பார்க்கிறோம். தேர்தல் வாக்குறுதிகள் மாத்திரம் அல்லாமல் அவற்றில் இல்லாத பல நல்ல திட்டங்களையும் தமிழக முதல்வர் நிறைவேற்றி இருக்கின்றார். ஆகவே, மக்கள் 2026 ஆம் ஆண்டு மீண்டும் இரண்டாவது முறையாக தமிழக முதல்வரை அரியணையில் அமர்த்துவார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் தான் தஞ்சை பெரிய கோயிலுக்கு 1000 ஆண்டு விழாவை எடுத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகுதான் ஆன்றோர், சான்றோர் பெருமக்கள், சித்தர்கள் ஆகியோருக்கு விழா எடுக்கின்ற அரசு இந்த அரசு. ஆகவே அறியாமையில் பேசுகின்ற விஜய்க்கு பதில் கூறிக் கொண்டிருப்பதற்கு நேரம் போதவில்லை. பாஜக வேண்டும் என்றால் அந்த நாடகத்திற்கு துணை போகலாம். இவருக்கு தந்திருக்கின்ற பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் எதற்கு பயன்படுகின்றன. இது நாடகமா அல்லது அது நாடகமா என்பதை உங்களின் முடிவுக்கு விட்டு விடுகிறேன். நேற்றைய முன்தினம் பாரத பிரதமர் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வருகைதந்த போது முதலமைச்சர் வைத்த கோரிக்கையில் பிரதானமான கோரிக்கையே இரு மொழிக் கொள்கையே எங்கள் கொள்கை. தேசிய கல்விக் கொள்கைளையை ஏற்றுக் கொள்ள மாட்டோம். அதனை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய அரசை வன்மையாக கல்வித்துறை கண்டித்து கொண்டிருக்கின்றது. இவ்வளவு கண்டனத்திற்கு பிறகும் தேசிய கல்விக் கொள்கையை திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்துகிறார்கள். எங்கள் முதலமைச்சர் இரு மொழி கொள்கைக்காக 10,000 கோடி நஷ்டம் என்றாலும் அதை ஏற்று கொண்டு சமாளிப்பதற்கு தமிழக அரசு தயார் என்று அறைகூவல் விடுத்திருக்கின்றார். மத்திய அரசுக்கு துதி பாடுகின்றவர்கள் இதுபோன்ற நிதியை பெற்று தருவதற்கு உண்டான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அன்பு சகோதரர் திருமாவளவன் கொள்கை பிடிப்போடு இருக்கின்ற ஒரு தலைவர். எந்த சூழல் வந்தாலும் அண்ணன் தளபதியை விட்டு அவர் நகர மாட்டார். டிடிவி தினகரன் கடந்த காலத்தில் அவர் தான் முதல்வர் என்று கூறி சுற்றிக் கொண்டிருந்தார். அதிலிருந்து பின்வாங்கியதற்கு வாழ்த்துகள். ராஜேந்திர பாலாஜி நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கில் மடியிலே கனமில்லை என்றால் வழியிலே பயமில்லை என்று நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏறி அவர் நிரபராதி என்று நிருபிக்கட்டும். அவர் ஜாமீன் கோரிய அனைத்து இடங்களிலும் மறுக்கப்பட்டிருக்கின்றது. கடைசியாக அவர் உச்சநீதிமன்றத்திற்கு சென்ற தான் ஜாமீன் பெற வேண்டிய சூழ்நிலை. ஆகவே அவர் மீது சுமத்தப்பட்ட வழக்கில் நியாயமான குற்ற முகாந்திரம் இருப்பதால்தான் எளிதில் அவருக்கு ஜாமீன் கூட கிடைக்கவில்லை.

இராயபுரத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு போதுமான இடவசதி இல்லை. மாநகராட்சி ஏற்கனவே அங்கேதான் திட்டமிட்டு இருந்தது. நான் அந்த தொகுதியின் உடைய அமைச்சர் என்ற முறையில் அதை சென்று பார்வையிட்டு அந்த இடம் போதாது என்று கருத்து தெரிவித்ததன் காரணமாக துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தீவுத்திடல் அருகில் ஏற்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தேன். மெட்ரோ இரயில் பணிகளால் வட சென்னையில் ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கின்றது. இந்த போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு இரண்டு இடங்களில் பேருந்து நிலையங்களை ஏற்படுத்துவதற்கு உண்டான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தற்பொழுது தான் பிராட்வே பழைய பேருந்து நிலையத்தை இடிக்கின்ற பணிகள் துவக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் மாற்று இடம் உறுதி செய்யப்பட்ட பிறகு முழுவதுமாக அந்த பேருந்து நிலையத்தை இடிக்கின்ற பணி தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளத்தை நேரில் பார்வையிட்டு, அத்திருக்குளத்தில் தண்ணீர் நிரப்பிட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நீர்வள ஆதாரத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, திருமதி சி. ஹரிப்ரியா, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலை குழுத் தலைவர் என். சிற்றரசு, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.வி.எம். வேல்முருகன், இணை ஆணையர்கள் திருமதி இரா. வான்மதி, திரு சி. குமரதுரை, திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி பெ.க.கவெனிதா, துணை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா, உதவி ஆணையர் ஆர் கார்த்திகேயன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி கஸ்தூரி, திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி முத்துலட்சுமி, பள்ளி முதல்வர் திருமதி ஜெயந்தி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், வெள்ளியூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முகாமை தொடங்கி வைத்து ஒரு மூதாட்டி விண்ணப்பித்த உடனேயே காது கேட்கும் கருவினை அணிவித்து விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக சான்றிதழ்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் ஊட்டச்சத்து பெட்டகத்தையும் வழங்கினர் உடன் ஒன்றிய பொறுப்பாளர் டி.முரளிகிருஷ்ணன் துணை ஆட்சியர் பாலமுருகன் அரசு அதிகாரிகள் பரமசிவம், செல்வகுமார், மெல்கி ராஜாஙசிங், ஒன்றி நிர்வாகிகள் எம்.பர்கத்துல்லாகான், டி.தென்னவன், மனோகரன், விமலாகுமார், பிராங்கிளின், எஸ்.வேலு, பி.கே.இ.கபிலன், ஒதிக்காடு பாலாஜி, சந்தோஷ், அஜித் குமார், தசரதன் , கன்னியப்பன், வெங்கடேசன், மூர்த்தி, வேலு, ஏழுமலை, கஜேந்திரன், கோவிந்தசாமி, ஜெய்சங்கர், யுவராணி, தெய்வநீதி, கிரிஜா, தேவி, ஜெயம்மாள், சதீஷ், சுரேஷ் உள்பட பலர் உள்ளனர்.



சென்னை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பத்மநாபன் அவர்களுடைய மகள் சுமதி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் அவரின் மருத்துவ செலவிற்கு சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பகுதி துணை அமைப்பாளர் சேவா ரத்னா எஸ்.நஜீம் நிதி உதவி வழங்கினார். உடன் 175வது வட்டக் கழக பகுதி பிரதிநிதி உ. சிவா உள்ளார்.

## தி.மு.க. பொறியாளர் அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு விழுப்புரம் தெற்கு, தூத்துக்குடி வடக்கு ஆகிய மாவட்டங்களின் தி.மு.க. பொறியாளர் அணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - சி. சுரேஷ், 94/2, சி.எஸ்.ஐ. சர்ச் தெரு, நேமூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605203.

துணை அமைப்பாளர்கள் - 1) துரை. ஸ்டாலின், 8, ஆஞ்சநேயர் கோயில் தெரு, அனுமந்தபுரம், போரூர் அஞ்சல், விக்கிரவாண்டி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605202. 2) து. செந்தில்குமார், 2/112, மெயின் ரோடு, வசந்தகிருஷ்ணாபுரம் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605758. 3) பா. ஆனந்த்குமார், மெயின் ரோடு, ஏனாதிமங்கலம், திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 607107. 4) ச. யுவராஜ், 5, வாணியர் வீதி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் - 605652. 5) பா. சிங்காரவேலன், 2/92, ஐயர் தெரு, பேரங்கியூர் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 607107.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் இ. ஆபிரகாம் மனுவேல் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் வகித்து வந்த மாவட்ட துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு **எஸ். கணேஷ்குமார்,** (46/2, நந்த கோபாலபுரம், தூத்துக்குடி - 2.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-07-2025.

கு. கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி




படப்பையில் நடைபெற்ற குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆலோசனை வழங்கி பேசினார். மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், திருமுடிவாக்கம் ஏ.மணி, திருமதி. சரஸ்வதிமனோகரன், ஏ.வந்தேமாதரம், திருமதி. உமா மகேஸ்வரி வந்தேமாதரம், வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மு.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆர்.தீபக், க.பா.ஆடலரசு, அ. ஜமீர், ஆர். சையத்ரமீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ஆலந்தூர் தெற்கு பகுதியில் 167–வது வார்டில் உள்ள 349 வது பாகம் லட்சுமி நகர் 5வது தெருவில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும் 12 வது மண்டல குழு தலைவருமான என். சந்திரன், 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் மற்றும் பாக முகவர், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் முகவர், ரவீந்திரன், ரவி, ஏ.கே. நாராயணன், கிருஷ்ணசாமி, திருநாவுக்கரசு, லலிதா ராமகிருஷ்ணன், குருமூர்த்தி, மகேஷ், சரவணன், ஆகியோர் கலந்து கொண்டனர்.